# பெரியாழ்வார்

உன்னையும் ஒக்கலையில் கொண்டு தம் இல் மருவி
உன்னொடு தங்கள் கருத்தான செய்துவரும்
கன்னியரும் மகிழக் கண்டவர் கண்குளிரக்
கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கு அருளி
மன்னு குறுங்குடியாய் வெள்ளறை யாய்
மதிள்சூழ் சோலை மலைக்கரசே கண்ணபுரத் அமுதே
என்னவலம் களைவாய் ஆடுக செங்கீரை
ஏழுலகும் முடையாய் ஆடுக ஆடுகவே.

# ஆண்டாள்

காட்டில் வேங்கடம் கண்ண புரநகர்
வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்டரா வந்து என் கைப்பற்றி தன்னோடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே

# குலசேகராழ்வார்

மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கை கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ 719

புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே
திண்டிறலாள் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய்
கண்டவர்தம் மனம் வழங்கும் கணபுரத்தென் கருமணியே
எண்டிசையும் ஆளுடையாய் இராகவனே தாலேலோ 720

கொங்குமலி கருங்குழலாள் கௌசலை தன் குலமதலாய்*
தங்குபெரும்புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதீ*
கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்தென்கருமணியே*
எங்கள் குலத்து இன்னமுதே இராகவனே! தாலேலோ. 721

தாமரைமே லயனவனைப் படைத்தவனே தசரதன் தன்
மாமதலாய் மைதிலி தன் மணவாளா! வண்டினங்கள்
காமரங்க ளிசைபாடும் கணபுரத்தென் கருமணியே
ஏமருவும் சிலைவலவா! இராகவனே! தாலேலோ 722

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேயருளி
ஆரா அன்பு இளையவனோடு அருங்கான மடைந்தவனே

சீராளும் வரை மார்பா திருக்கண்ணபுரத்தரசே
தாராளும் நீண்முடி என் தாசரதீ தாலேலோ 723

சுற்றம் எல்லாம் பின் தொடரத் தொல் கானம் அடைந்தவனே!
அற்றவர்கட்கு அருமருந்தே! அயோத்தி நகர்க்கு அதிபதியே!
கற்றவர்கள் தாம் வாழும் கணபுரத்து என் கருமணியே!
சிற்றவை தன் சொற் கொண்ட சீராமா! தாலேலோ! 724

ஆலினிலைப் பாலகனா யன்றுலக முண்டவனே
வாலியைகொன் றரசிளைய வானரத்துக் களித்தவனே
காலின்மணி கரையலைக்கும் கணபுரத்தென் கருமணியே
ஆலிநகர்க்கு அதிபதியே அயோத்தி மனே தாலேலோ 725

மலையதனால் அணைகட்டி மதிளிலங்கை அழித்தவனே
அலைகடலைக் கடைந்தமரர்க் கமுதருளிச் செய்தவனே
கலைவலவர் தாம் வாழும் கணபுரத்தென் கருமணியே
சிலைவலவா சேவகனே சீராம தாலேலோ 726

தளையவிழும் நறுங்குஞ்சி தயரதன்தன் குலமதலாய்
வளையவொரு சிலை அதனால் மதிளிலங்கை அழித்தவனே
களை கழுநீர் மருங்கலரும் கணபுரத்தென் கருமணியே
இளையவர்கட் கருளுடையாய் இராகவனே தாலேலோ 727

தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே
யாவரும் வந்து அடி வணங்கி அரங்கநகர்த் துயின்றவனே
காவிரி நல் நதி பாயும் கணபுரத்தென் கருமணியே
ஏவரி வெஞ்சிலை வலவா இராகவனே தாலேலோ 728

கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் காகுத்தன்
தன்னடிமேல் தாலேலோ என்றுரைத்த தமிழ்மாலை
கொல்நவிலும் வேல்வலவன் குடைக்குலசே கரஞ்சொன்ன
பன்னிய நூல் பத்தும்வல்லார் பாங்காய பத்தர்களே. 729

# திருமங்கையாழ்வார்

# பெரிய திருமொழி

## முதல் திருமொழி

சிலையிலங்கு பொன்னாழி திண்படைதண் டொண்சங்கம் என்கின் றாளால்,
மலையிலங்கு தோள்நான்கே மற்றவனுக் கெற்றேகாண் என்கின் றாளால்,
முலையிலங்கு பூம்பயலை முன்போட அன்போடி யிருக்கின் றாளால்,
கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ.
1648

செருவரை முன் ஆசு அறுத்த சிலையன்றோ கைத்தலத்து என்கின்றாளால்,
பொருவரை முன் போர் தொலைத்த பொன்னாழி மற்றொரு கை
என்கின்றாளால்,
ஒருவரையும் நின்னொப்பா ரொப்பிலர் என்னப்பா என்கின்றாளால்,
கரு வரைபோல் நின்றானைக் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ.
1649

துன்னுமா மணிமுடிமேல் துழாயலங்கல் தோன்றுமால் என்கின்றாளால்,
மின்னுமா மணி மகர குண்டலங்கள் வில் வீசும் என்கின்றாளால்,
பொன்னின் மா மணியாரம் அணி அகத்து இலங்கும் மால் என்கின்றாளால்,
கன்னிமா மதிள்புடைசூழ் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ. 1650

தாராய தண்டுளப வண்டுழுத வரை மார்பன் என்கின்றாளால்,
போரானைக் கொம்பொசித்த புட்பாகன் என்னம்மான் என்கின்றாளால்,
ஆரானும் காண்மின்கள் அம்பவளம் வாயவனுக் கென்கின் றாளால்,
கார்வானம் நின்ற திருக் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ. 1651

அடித்தலமும் தாமரையே அங்கையும் பங்கயமே என்கின்றாளால்,
முடித்தலமும் பொற்பூணு மென்நெஞ்சத் துள்ளகலா என்கின் றாளால்,
வடித்தடங்கண் மலரவளோ வரையாகத் துள்ளிருப்பாள் என்கின் றாளால்,
கடிக்கமலம் கள் உகுக்கும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ.1652

பேராயிரமுடைய பேராளன் பேராளன் என்கின்றாளால்,
ஏரார் கனமகர குண்டலத்தன் எண்தோளன் என்கின்றாளால்,
நீரார் மழை முகிலே நீள்வரையே ஒக்குமால் என்கின்றாளால்,
காரார் வயலமரும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ. 1653

செவ்வரத்த உடையாடை யதன் மேலோர் சிவளிகைக்கச் என்கின்றாளால்,
அவ்வரத்த வடி இணையே மங்கைகளும் பங்கயமே என்கின்றாளால்,
மை வளர்க்கும் மணியுருவம் மரகதமோ மழைமுகிலோ என்கின்றாளால்,
கைவளர்க்கு மழலாளர் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ. 1654

கொற்றப்புள் ளொன்றேறி மன்னூடே வருகின்றான் என்கின் றாளால்,
வெற்றிப்போ ரிந்திரற்கு மிந்திரனே ஒக்குமால் என்கின்றாளால்,
பெற்றக்கா லவனாகம் பெண்பிறந்தோம் உய்யோமோ என்கின்றாளால்,
கற்ற நூல் மறையாளர் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ. 1655

வண்டமரும் வனமாலை மணிமுடிமேல் மணநாறும் என்கின்றாளால்,
உண்டிவர்பா லன்பெனக்கென் றொருகாலும் பிரிகிலேன் என்கின் றாளால்,
பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில் யாம் என்றே பயில்கின் றாளால்,
கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொல்லோ.
1656

மாவளரு மென்னோக்கி மாதராள் மாயவனைக் கண்டாள் என்று,
காவளரும் கடிபொழில்சூழ் கண்ணபுரத் தம்மானைக் கலியன் சொன்ன,
பாவளரும் தமிழ்மாலை பன்னிய நூல் இவையைந்து மைந்தும் வல்லார்,
பூவளரும் கற்பகம்சேர் பொன்னுலகில் மன்னவராய்ப் புகழ் தக்கோரே. 1657

## இரண்டாம் திருமொழி

தெள்ளியீர். தேவர்க்கும் தேவர் திருத்தக்கீர்
வெள்ளியீர் வெய்ய விழுநிதி வண்ணர்,ஓ
துள்ளுநீர்க் கண்ண புரம் தொழுதாளிவள் கள்வியோ,
கைவளை கொள்வது தக்கதே? 1658

நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினாள்,
காணுமோ கண்ணபுரம் என்று காட்டினாள்,
பாணனார் திண்ண மிருக்க இனியிவள்
நாணுமோ, நன்று நன்று நறை யூரர்க்கே. 1659

அருவி சோர் வேங்கடம் நீர்மலை என்று வாய்
வெருவினாள் மெய்யம் வினவியிருக்கின்றாள்,
பெருகுசீர்க் கண்ணபுரம் என்று பேசினாள்
உருகினாள், உள்மெலிந்தாள் இது வென்கொலோ. 1660

உண்ணும் நாளில்லை உறக்கமும் தானில்லை,
பெண்மையும் சால நிறைந்திலள் பேதை தான்,
கண்ணனூர் கண்ணபுரம் தொழும் கார்க்கடல்
வண்ணர் மேல், எண்ணம் இவட்கு இது வென்கொலோ. 1661

கண்ணனூர் கண்ண புரம் தொழும் காரிகை,
பெண்மையும் தன்னுடை உண்மை உரைக்கின்றாள்,
வெண்ணெய் உண்டாப்புண்ட வண்ணம் விளம்பினாள்,
வண்ணமும் பொன்னிற மாவ தொழியுமே. 1662

வடவரை நின்றும் வந்து இன்று கணபுரம்,
இடவகை கொள்வது யாம் என்று பேசினாள்,
மடவரல் மாதரென் பேதை யிவர்க்கிவள்
கடவதென், கண்டுயி லின்றிவர் கொள்ளவே. 1663

தரங்கநீர் பேசினும் தண்மதி காயினும்,
இரங்குமோ எத்தனை நாளிருந் தெள்கினாள்
துரங்கம்வாய் கீண்டுகந் தானது தொன்மை ஊர்
அரங்கமே என்ப திவள்தனக் காசையே. 1664

தொண்டெல்லாம் நின்னடியே தொழு துய்யுமா
கண்டு,தான் கணபுரம் கை தொழப் போயினாள்
வண்டுலாம் கோதையென் பேதை மணி நிறம்
கொண்டுதான், கோயின்மை செய்வது தக்கதே? 1665

முள்ளெயி றேய்ந்தில, கூழை முடிகொடா,
தெள்ளியள் என்பதோர் தேசிலள் என்செய்கேன்,
கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழும்
பிள்ளையை, பிள்ளையென் றெண்ணப் பெறுவரே? 1666

கார்மலி கண்ணபுரத்து எம் அடிகளை,
பார்மலி மங்கையர் கோன் பரகாலன் சொல்,
சீர்மலி பாடல் இவை பத்தும் வல்லவர்,
நீர்மலி வையத்து நீடு நிற்பார்களே. 1667

## மூன்றாம் திருமொழி

கரையெடுத்த சுரிசங்கும் கனபவளத் தெழுகொடியும்,
திரையெடுத்து வருபுனல் சூழ் திருக்கண்ண புரத்துறையும்,
விரையெடுத்த துழாயலங்கல் விறல் வரைத்தோள் புடைபெயர
வரையெடுத்த பெருமானுக் கிழந்தேனென் வரிவளையே. 1668

அரிவிரவு முகிற் கணத்தா னகில்புகையால் வரையோடும்
தெரிவரிய மணிமாடத் திருக்கண்ண புரத்துறையும்,
வரியரவி னணைத்துயின்று மழைமதத்த சிறுதறுகண்,
கரிவெருவ மருப்பொசித்தாற் கிழந்தேனென் கனவளையே. 1669

துங்கமா மணிமாட நெடுமுகட்டின் சூலிகைபோம்
திங்கள் மா முகில்துணிக்கும் திருக்கண்ண புரத்துறையும்
பைங்கண்மால் விடையடர்த்துப் பனிமதிகோள் விடுத்துகந்த
செங்கண்மா லம்மானுக் கிழந்தேனென் செறிவளையே. 1670

கண் மருவு மயிலகவு கடிபொழில்சூழ் நெடுமறுகில்,
திணமருவு கன மதிள்சூழ் திருக்கண்ண புரத்துறையும்,
மணமருவு தோளாய்ச்சி யார்க்கப்போய் உரலோடும்
புணர்மருத மிறநடந்தாற் கிழந்தேனென் பொன்வளையே. 1671

வாயெடுத்த மந்திரத்தால் அந்தணர்தம் செய்தொழில்கள்
தீயெடுத்து மறைவளர்க்கும் திருக்கண்ண புரத்துறையும்
தாயெடுத்த சிறுகோலுக் குளைந்தோடித் தயிருண்ட,
வாய்துடைத்த மைந்தனுக் கிழந்தேனென் வரிவளையே. 1672

மடலெடுத்த நெடுந்தாழை மருங்கெல்லாம் வளர்பவளம்,
திடலெடுத்துச் சுடரிமைக்கும் திருக்கண்ண புரத்துறையும்,
அடலடர்த்தன் றிரணியனை முரணழிய அணியுகிரால்,
உடலெடுத்த பெருமானுக் கிழந்தேனென் ஒளிவளையே. 1673

வண்டமரும் மலர்ப்புன்னை வரிநீழ லணிமுத்தம்,
தெண்டிரைகள் வரத்திரட்டும் திருக்கண்ண புரத்துறையும்,
எண்டிசையும் எழுசுடர் இருநிலனும் பெருவிசும்பும்,
உண்டுமிழ்ந்த பெருமானுக் கிழந்தேனென் ஒளிவளையே. 1674

கொங்குமலி கருங்குவளை கண்ணாக தெண்கயங்கள்
செங்கமல முகமலர்த்தும் திருக்கண்ண புரத்துறையும்,
வங்கமலி தடங்கடலுள் வரியரவி னணைத்துயின்றா,
செங்கமல நாபனுக் கிழந்தேனென் செறிவளையே. 1675

வாராளு மிளங்கொங்கை நெடும் பணைத்தோள் மடப்பாவை,
சீராளும் வரை மார்வன் திருக்கண்ண புரத்துறையும்,
பேராள னாயிரம்பே ராயிரவாய் அரவணைமேல்
பேராளர் பெருமானுக் கிழந்தேனென் பெய்வளையே. 1676

தேமருவு பொழில்புடைசூழ் திருக்கண்ண புரத்துறையும்
வாமனனை, மறிகடல் சூழ் வயலாலி வளநாடன்,
காமருசீர்க் கலிகன்றி கண்டுரைத்த தமிழ்மாலை,
நாமருவி யிவைபாட வினையாய நண்ணாவே. 1677

## நான்காம் திருமொழி

விண்ணவர் தங்கள் பெருமான் திருமார்வன்,
மண்ணவ ரெல்லாம் வணங்கும் மலி புகழ்சேர்,
கண்ணபுரத்து எம் பெருமான் கதிர்முடிமேல்,
வண்ண நறுந்துழாய் வந்தூதாய் கோல்தும்பீ. 1678

வேத முதல்வன் விளங்கு புரிநூலன்,
பாதம் பரவிப் பலரும் பணிந்தேத்தி,
காதன்மை செய்யும் கண்ணபுரத் தெம்பெருமான்,
தாது நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ. 1679

விண்டமல ரெல்லா மூதிநீ யென்பெறுதி,
அண்ட முதல்வ னமரர்க ளெல்லாரும்,
கண்டு வணங்கும் கண்ணபுரத் தெம்பெருமான்
வண்டு நறுந்துழாய் வந்தூதாய் கோல்தும்பீ. 1680

நீர்மலி கின்றதோர் மீனாயோ ராமையுமாய்,
சீர்மலி கின்றதோர் சிங்க உருவாகி,
கார்மலி வண்ணன் கண்ணபுரத் தெம்பெருமான்,
தார்மலி தண்டுழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ. 1681

ஏரார் மலரெல்லா மூதி நீ யென்பெறுதி,
பாரா ருலகம் பரவப் பெருங்கடலுள்,
காராமை யான கண்ணபுரத் தெம்பெருமான்,
தாரார் நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ. 1682

மார்வில் திருவன் வலனேந்து சக்கரத்தன்,
பாரைப் பிளந்த பரமன் பரஞ்சோதி,
காரில் திகழ்காயா வண்ணன் கதிர்முடிமேல்,
தாரில் நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ. 1683

வாமனன் கற்கி மதுசூதன் மாதவன்
தார்மன்னு தாச ரதியாய தடமார்வன்,
காமன்றன் தாதை கண்ணபுரத் தெம்பெருமான்,
தாம நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ. 1684

நீல மலர்கள் நெடுநீர் வயல் மருங்கில்,
சால மலரெல்லா மூதாதே, வாளரக்கர்
காலன் கண்ணபுரத் தெம்பெருமான் கதிர்முடிமேல்,
கோல நறுந்துழாய் கொண்டூதாய் கோல்தும்பீ. 1685

நந்தன் மதலை நிலமங்கை நல் துணைவன்,
அந்த முதல்வன் அமரர்கள் தம்பெருமான்,
கந்தம் கமழ்காயா வண்ணன் கதிர்முடிமேல்,
கொந்து நறுந்துழாய் கொண்டூதாய் கோல்தும்பீ. 1686

வண்டமருஞ் சோலை வயலாலி நன்னாடன்,
கண்டசீர் வென்றிக் கலிய னொலிமாலை,
கொண்டல் நிறவண்ணன் கண்ண புரத்தானை,
தொண்டரோம் பாட நினைந்தூதாய் கோல்தும்பீ. 1687

## ஐந்தாம் திருமொழி

தந்தை காலில் விலங்கறவந்து தோன்றிய தோன்றல் பின்,தமியேன்றன்
சிந்தை போயிற்றுத் திருவருள் அவனிடைப் பெறுமள விருந்தேனை,
அந்தி காவலனமுதுறு பசுங்கதிர் அவை சுட அதனோடும்,
மந்த மாருதம் வனமுலை தடவந்து வலிசெய்வ தொழியாதே. 1688

மாரி மாக்கடல் வளை வணற் கிளையவன் வரைபுரை திருமார்பில்,
தாரி னாசையில் போயின நெஞ்சமும் தாழ்ந்ததோர் துணைகாணேன்,
ஊரும் துஞ்சிற்றுலகமும் துயின்றது ஒளியவன் விசும்பியங்கும்,
தேரும் போயிற்றுத் திசைகளும் மறைந்தன செய்வதொன் றறியேனே. 1689

ஆயன் மாயமே யன்றி மற்றென்கையில் வளைகளும் இறைநில்லா,
பேயின் ஆருயி ருண்டிடும் பிள்ளை நம் பெண்ணுயிர்க் கிரங்குமோ,
தூய மாமதிக் கதிர்ச்சுடத் துணையில்லை இணைமுலை வேகின்றதால்,
ஆயன் வேயினுக் கழிகின்ற துள்ளமும் அஞ்சேலென் பாரிலையே. 1690

கயங்கொள் புண்தலைக் களிறுந்து வெந்திறல் கழல்மன்னர் பெரும்போரில்,
மயங்க வெண்சங்கம் வாய் வைத்த மைந்தனும் வந்திலன், மறிகடல் நீர்
தயங்கு வெண்திரைத் திவலைநுண் பனியென்னும் தழல்முகந் திளமுலைமேல்,
இயங்கு மாருதம் விலங்கிலென் ஆவியை எனக்கெனப் பெறலாமே. 1691

ஏழு மாமரம் துளைபடச் சிலைவளைத் திலங்கையை மலங்குவித்த
ஆழியான்,நமக்கருளிய அருளொடும் பகலெல்லை கழிகின்றதால்,
தோழி நாமிதற் கென்செய்தும் துணையில்லை சுடர்படு முதுநீரில்,
ஆழ ஆழ்கின்ற ஆவியை அடுவதோர் அந்திவந் தடைகின்றதே. 1692

முரியும் வெண்டிரை முதுகயம் தீப்பட முழங்கழ லெரியம்பின்,
வரிகொள் வெஞ்சிலை வளைவித்த மைந்தனும் வந்திலன் என்செய்கேன்,
எரியும் வெங்கதிர் துயின்றது பாவியேன் இணைநெடுங் கண்துயிலா,
கரிய நாழிகை ஊழியில் பெரியன கழியுமா றறியேனே. 1693

கலங்க மாக்கடல் கடைந்தடைத் திலங்கையர் கோனது வரையாகம்,
மலங்க வெஞ்சமத் தடுசரம் துரந்த வெம் மடிகளும் வாரானால்,
இலங்கு வெங்கதி ரிளமதி யதனொடும் விடைமணி யடும்,ஆயன்
விலங்கல் வேயின தோசையு மாயினி விளைவதொன் றறியேனே. 1694

முழுதிவ் வையகம் முறைகெட மறைதலும் முனிவனும் முனிவெய்தி,
மழுவினால் மன்னர் ஆருயிர் வவ்விய மைந்தனும் வாரானால்,
ஒழுகு நுண்பனிக் கொடுங்கிய பேடையை யடங்கவஞ் சிறைகோலி,
தழுவு நள்ளிருள் தனிமையிற் கடியதோர் கொடுவினை யறியேனே. 1695

கனஞ்செய் மாமதிள் கணபுரத் தவனொடும் கனவினி லவன்தந்த,
மனஞ்செ யின்பம்வந் துள்புக வெள்கியென் வளைநெக இருந்தேனை,
சினஞ்செய் மால்விடைச் சிறுமணி ஓசையென் சிந்தையைச் சிந்துவிக்கும்,
அனந்த லன்றிலின் அரிகுரல் பாவியே னாவியை யடுகின்றதே. 1696

வார்கொள் மென்முலை மடந்தையர் தடங்கடல் வண்ணனைத் தாள்நயந்து,
ஆர்வத் தாலவர் புலம்பிய புலம்பலை அறிந்துமுன் உரைசெய்த,
கார்கொள் பைம்பொழில் மங்கையர் காவலன் கலிகன்றி யொலிவல்லார்,
ஏர்கொள் வைகுந்த மாநகர் புக்கு இமையவரொடும் கூடுவரே. 1697

## ஆறாம் திருமொழி

தொண்டீர். உய்யும் வகை கண்டேன் துளங்கா அரக்கர் துளங்க முன்
திண்டோள் நிமிரச் சிலை வளையச் சிறிதே முனிந்த திருமார்பன்,
வண்டார் கூந்தல் மலர்மங்கை வடிக்கண் மடந்தை மா நோக்கம் கண்டாள்,
கண்டு கொண்டு கந்த கண்ணபுரம் நாம் தொழுதுமே. 1698

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப் பொன்ற அன்று புள்ளூர்ந்து,
பெருந்தோள் மாலி தலை புரளப் பேர்ந்த அரக்கர் தென்னிலங்கை,
இருந்தார் தம்மை யுடன்கொண்டங் கெழிலார் பிலத்துப் புக்கொளிப்ப,
கருந்தாள் சிலைகைக் கொண்டானூர் கண்ணபுரம் நாம் தொழுதுமே. 1699

வல்லி யிடையாள் பொருட்டாக மதிள் நீ ரிலங்கை யார்கோவை,
அல்லல் செய்து வெஞ்சமத்துள் ஆற்றல் மிகுந்த ஆற்றலான்,
வல்லாள் அரக்கர் குலப்பாவை வாட முனி தன் வேள்வியை,
கல்விச் சிலையால் காத்தானூர் கண்ணபுரம் நாம் தொழுதுமே. 1700

மல்லை முந்நீ ரதர்பட வரிவெஞ் சிலைகால் வளைவித்து,
கொல்லை விலங்கு பணி செய்யக் கொடியோன் இலங்கை புகலுற்று,
தொல்லை மரங்கள் புகப்பெய்து துவலை நிமிர்ந்து வானணவ,
கல்லால் கடலை யடைத்தானூர் கண்ணபுரம் நாம் தொழுதுமே. 1701

ஆமை யாகி அரியாகி அன்ன மாகி அந்தணர்தம்
ஓம மாகி ஊழியாய் உலகு சூழ்ந்த நெடும்புணரி
சேம மதிள்சூழிலங்கைக்கோன் சிரமுங்கரமும் துணித்து முன்
காமற் பயந்தான் கருதுமூர் கண்ணபுரம் நாம் தொழுதுமே. 1702

வருந்தா திருநீ மடநெஞ்சே நம் மேல் வினைகள் வாரா முன்
திருந்தா அரக்கர் தென்னிலங்கை செந்தீ யுண்ணச் சிவந்தொருநாள்,
பெருந்தோள் வாணர் அருள்புரிந்து பின்னை மணாள னாகி முன்
கருந்தாள் களிறொன் றொசித்தானூர் கண்ணபுரம் நாம் தொழுதுமே. 1703

இலையார் மலர்ப்பூம் பொய்கைவாய் முதலை தன்னால் அடர்ப்புண்டு,
கொலையார் வேழம் நடுக்குற்றுக் குலைய அதனுக் கருள்புரிந்தான்,
அலைநீ ரிலங்கைத் தசக்கிரீ வற்கு இளையோற் கரசை யருளி,முன்
கலைமாச் சிலையால் எய்தானூர் கண்ண புரம்நாம் தொழுதுமே. 1704

மாலாய் மனமேயருந்துயரில் வருந்தா திருநீ வலிமிக்க
காலார் மருதும் காய்சினத்த கழுதும் கதமாக் கழுதையும்,
மாலார் விடையும் மதகரியும் மல்லர் உயிரும் மடிவித்து,
காலால் சகடம் பாய்ந்தானூர் கண்ணபுரம் நாம் தொழுதுமே. 1705

குன்றால் மாரி பழுதாக்கிக் கொடியே ரிடையாள் பொருட்டாக,
வன்றாள் விடையே ழன்றடர்த்த வானோர் பெருமான் மாமாயன்,
சென்றான் தூது பஞ்சவர்க்காய்த் திரிகாற் சகடம் சின மழித்து,
கன்றால் விளங்கா யெறிந்தானூர் கண்ணபுரம் நாம் தொழுதுமே. 1706

கருமா முகில் தோய் நெடுமாடக் கண்ண புரத்தெம் அடிகளை,
திருமா மகளா லருள்மாரி செழுநீ ராலி வளநாடன்,
மருவார் புயல்கைக் கலிகன்றி மங்கை வேந்த னொலிவல்லார்
இருமா நிலத்துக் கரசாகி இமையோர் இறைஞ்ச வாழ்வாரே. 1707

## ஏழாம் திருமொழி

வியமுடை விடையினம் உடை தர மடமகள்,
குயமிடை தடவரை யகலம துடையவர்,
நயமுடை நடையனம் இளையவர் நடைபயில்,
கயமிடை கணபுரம் அடிகள்தமிடமே. 1708

இணைமலி மருதினொ டெருதிற இகல்செய்து
துணைமலி முலையவள் மணமிகு கலவியுள்,
மணமலி விழவினொ டடியவர் அளவிய,
கணமலி கணபுரம் அடிகள்தம் இடமே. 1709

புயலுறு வரைமழை பொழிதர மணிநிரை,

மயலுற வரைகுடை யெடுவிய நெடியவர்,
முயல்துளர் மிளைமுயல் துளவள விளைவயல்,
கயல்துளு கணபுரம் அடிகள்தம் இடமே. 1710

ஏதலர் நகைசெய இளையவர் அளைவெணெய்
போதுசெய் தமரிய புனிதர்நல் விரைமலர்
கோதிய மதுகரம் குலவிய மலர்மகள்
காதல்செய் கணபுரம் அடிகள்தம் இடமே. 1711

தொண்டரும் அமரரும் முனிவரும் தொழுதெழ
அண்டமொ டகலிடம் அளந்தவர் அமர்ச்செய்து
விண்டவர் படமதி ளிலங்கைமுன் னெரியெழ
கண்டவர் கணபுரம் அடிகள்தம் இடமே. 1712

மழுவியல் படையுடை யவனிடம் மழைமுகில்,
தழுவிய உருவினர் திருமகள் மருவிய
கொழுவிய செழுமலர் முழுசிய பறவைபண்
எழுவிய கணபுரம் அடிகள்தம் இடமே. 1713

பரிதியொ டணிமதி பனிவரை திசைநிலம்
எரிதியொ டெனவின இயல்வினர் செலவினர்
சுருதியொ டருமறை முறைசொலு மடியவர்
கருதிய கணபுரம் அடிகள்தம் இடமே. 1714

படிபுல்கு மடியிணை பலர்தொழ மலர்வைகு
கொடிபுல்கு தடவரை அகலம துடையவர்
முடிபுல்கு நெடுவயல் படைசெல அடிமலர்
கடிபுல்கு கணபுரம் அடிகள்தம் இடமே. 1715

புலமனு மலர்மிசை மலர்மகள் புணரிய
நிலமக ளெனவின மகளிர்க ளிவரொடும்
வலமனு படையுடை மணிவணர் நிதிகுவை
கலமனு கணபுரம் அடிகள்தம் இடமே. 1716

மலிபுகழ் கணபுர முடையவெம் அடிகளை
வலிகெழு மதிளயல் வயலணி மங்கையர்
கலியன தமிழிவை விழுமிய இசையினொடு
ஒலிசொலும் அடியவர் உறுதுய ரிலரே. 1717

## எட்டாம் திருமொழி

வானோ ரளவும் முதுமுந்நீர் வளர்ந்த காலம், வலியுருவில்
மீனாய் வந்து வியந்துய்யக் கொண்ட தண்டாமரை கண்ணன்,
ஆனா வுருவி லானாயன் அவனை யம்மா விளைவயலுள்,
கானார் புறவில் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1718

மலங்கு விலங்கு நெடு வெள்ளம் மறுக அங்கோர் வரைநட்டு
இலங்கு சோதி யாரமுதம் எய்து மளவோர் ஆமையாய்,

விலங்கல் திரியத் தடங்கடலுள் சுமந்து கிடந்த வித்தகனை,
கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1719

பாரார் அளவும் முதுமுந்நீர் பரந்த காலம், வளைமருப்பில்
ஏரார் உருவத் தேனமாய் எடுத்த ஆற்ற லம்மானை,
கூரார் ஆரல் இரைகருதிக் குருகு பாயக் கயலிரியும்,
காரார் புறவில் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1720

உளைந்த அரியும் மானிடமும் உடனாய்த் தோன்ற ஒன்றுவித்து,
விளைந்த சீற்றம் விண்வெதும்ப வேற்றோன் அகலம் வெஞ்சமத்து,
பிளந்து வளைந்த வுகிரானைப் பெருந்தண் செந்நெற் குலைதடிந்து,
களஞ்செய் புறவில் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1721

தொழுநீர் வடிவில் குறளுருவாய் வந்து தோன்றி மாவலிபால்,
முழுநீர் வையம் முன்கொண்ட மூவா வுருவி னம்மானை
உழுநீர் வயலுள் பொன்கிளைப்ப ஒருபால் முல்லை முகையோடும்
கழுநீர் மலரும் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1722

வடிவாய் மழுவே படையாக வந்து தோன்றி மூவெழுகால்,
படியார் அரசு களைகட்ட பாழி யானை யம்மானை,
குடியா வண்டு கொண்டுண்ணக் கோல நீலம் மட்டுகுக்கும்,
கடியார் புறவில் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1723

வைய மெல்லா முடன்வணங்க வணங்கா மன்ன னாய்த்தோன்றி,
வெய்ய சீற்றக் கடியிலங்கை குடிகொண் டோட வெஞ்சமத்து,
செய்த வெம்போர் நம்பரனைச் செழுந்தண் கானல் மணநாறும்,
கைதை வேலிக் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1724

ஒற்றைக் குழையும் நாஞ்சிலும் ஒருபால் தோன்றத் தான்தோன்றி,
வெற்றித் தொழிலார் வேல்வேந்தர் விண்பாற் செல்ல வெஞ்சமத்து,
செற்ற கொற்றத் தொழிலானைச் செந்தீ மூன்றும் மில்லிருப்ப,
கற்ற மறையோர் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1725

துவரிக் கனிவாய் நிலமங்கை துயர்தீர்ந் துய்யப் பாரதத்துள்,
இவரித் தரசர் தடுமாற இருள்நாள் பிறந்த அம்மானை,
உவரி யோதம் முத்துந்த ஒருபா லொருபா லொண்செந்நெல்,
கவரி வீசும் கண்ணபுரத் தடியேன் கண்டு கொண்டேனே. 1726

மீனோடு ஆமை கேழலரி குறளாய் முன்னும் இராமனாய்த்
தானாய் பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும்
ஆனான் றன்னை கண்ணபுரத் தடியேன் கலிய னொலிசெய்த
தேனா ரின்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம் நில்லாவே. 1727

## ஒன்பதாம் திருமொழி

கைம்மான மதயானை இடர்தீர்த்த கருமுகிலை
மைம்மான மணியை அணிகொள் மரகதத்தை,
எம்மானை யெம்பிரானை யீசனை என் மனத்துள்

அம்மானை, அடியேன்  அடைந்துய்ந்து போனேனே.    1728

தருமான மழைமுகிலைப் பிரியாது தன்னடைந்தார்,
வருமானம் தவிர்க்கும் மணியையணியுருவில்,
திருமாலை யம்மானை அமுதத்தைக் கடற்கிடந்த
பெருமானை அடியே னடைந்துய்ந்து பிழைத்தேனே.    1729

விடையேழன் றடர்த்து வெகுண்டு விலங்கலுற
படையாலாழி தட்ட பரமன் பரஞ்சோதி,
மடையார் நீலம்மல்கும் வயல்சூழ் கண்ணபுரமொன்
றுடையானுக்கு அடியேன் ஒருவர்க் குரியேனோ?    1730

மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே.  1731

வந்தாய் என் மனத்தே வந்து நீ புகுந்தபின்னை,
எந்தாய் போயறியாய் இதுவே அமையாதோ
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக் கிடந்து  உகந்த
மைந்தா உன்னை என்றும் மறவாமைப் பெற்றேனே.    1732

எஞ்சா வெந்நரகத் தழுந்தி நடுங்குகின்றேற்கு,
அஞ்சேலென் றடியேனை ஆட்கொள்ள வல்லானை,
நெஞ்சே நீ நினையாது இறைப்பொழுதுமிருத்திகண்டாய்,
மஞ்சார் மாளிகைசூழ் வயலாலி மைந்தனையே.    1733

பெற்றார் பெற்றொழிந்தார் பின்னும்நின் றடியேனுக்கு,
உற்றானாய் வளர்த்து என்னுயிராகி நின்றானை,
முற்றா மாமதிகோள் விடுத்தானை யெம்மானை
எத்தால் யான்மறக்கேன் இது சொல்லெனனேழை நெஞ்சே.   1734

கற்றார் பற்றறுக்கும் பிறவிப் பெருங்கடலே
பற்றா வந்தடியேன் பிறந்தேன் பிறந்தபின்னை
வற்றா நீர் வயல் சூழ் வயலாலி யம்மானைப்
பெற்றேன் பெற்றதும் பிறவாமை பெற்றேனே.   1735

கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும்
தண்ணார் தாமரை சூழ் தலைச்சங்க மேல்திசையுள்
விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை
கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றதிங் கென்றுகொலோ.    1736

செருநீர வேல்வலவன் கலிகன்றி மங்கையர்கோன்
கருநீர் முகில்வண்ணன் கண்ண புரத்தானை
இருநீரின்தமிழ் இன்னிசை மாலைகள் கொண்டுதொண்டீர்,
வருநீர் வையமுய்ய இவைபாடி யாடுமினே.    1737

## பத்தாம் திருமொழி

வண்டார்பூ மாமலர் மங்கை மணநோக்கம்
உண்டானே உன்னை யுகந்துகந் துன்றனக்கே
தொண்டானேற்கு என்செய்கின் றாய்சொல்லு நால்வேதம்
கண்டானே கண்ண புறத்துறை யம்மானே 1738

பெருநீரும் விண்ணும் மலையு முலகேழும்
ஒருதாரா நின்னு ளொடுக்கிய நின்னையல்லால்
வருதேவர் மற்றுளரென் றென்மனத் திறையும்
கருதேன்நான் கண்ண புரத்துறை யம்மானே. 1739

மற்றுமோர் தெய்வ முளதென் றிருப்பாரோ
டுற்றிலேன் உற்றது முன்னடி யார்க்கடிமை
மற்றெல்லம் பேசிலும் நின்திரு வெட்டெழுத்தும்
கற்று நான் கண்ண புரத்துறை யம்மானே. 1740

பெண்ணானாள் பேரிளங் கொங்கையி னாரழல்போல்
உண்ணாநஞ் சுண்டுகந் தாயை யுகந்தேன்நான்
மண்ணாளா வாள்நெடுங் கண்ணி மதுமலராள்
கண்ணாளா கண்ண புரத்துறை யம்மானே. 1741

பெற்றாரும் சுற்றமு மென்றிவை பேணேன்நான்
மற்றாரும் பற்றிலே னாதலால் நின்னடைந்தேன்
உற்றானென் றுள்ளத்து வைத்தருள் செய்கண்டாய்
கற்றார்ச்சேர் கண்ண புரத்துறை யம்மானே. 1742

ஏத்தியுன் சேவடி யெண்ணி யிருப்பாரை,
பார்த்திருந் தங்கு நமன்றமர் பற்றாது
சோத்தம்நாம் அஞ்சுது மென்று தொடாமை நீ
காத்திபோல் கண்ண புரத்துறை யம்மானே. 1743

வெள்ளைநீர் வெள்ளத் தணைந்த அரவணைமேல்
துள்ளுநீர் மெள்ளத் துயின்ற பெருமானே
வள்ளலே உன்றமர்க் கென்றும் நமன்றமர்
கள்ளர்போல் கண்ண புரத்துறை யம்மானே. 1744

மாணாகி வைய மளந்ததுவும் வாளவுணன்
பூணாகம் கீண்டதுவும் ஈண்டு நினைந்திருந்தேன்
பேணாத வல்வினை யேனிட ரெத்தனையும்
காணேன்நான் கண்ண புரத்துறை யம்மானே. 1745

நாட்டினா யென்னை யுனக்குமுன் தொண்டாக
மாட்டினே னத்தனையே கொண்டென் வல்வினையை
பாட்டினா லுன்னையென் நெஞ்சத் திருந்தமை
காட்டினாய் கண்ண புரத்துறை யம்மானே. 1746

கண்டசீர்க் கண்ண புரத்துறை யம்மானை

கொண்டசீர்த் தொண்டன் கலிய னொலிமாலை
பண்டமாய்ப் பாடு மடியவர்க் கெஞ்ஞான்றும்
அண்டம்போ யாட்சி யவர்க்க தறிந்தோமே. 1747

## திருநெடுந்தாண்டகம்

கன்றுமேய்த் தினிதுகந்த காளாய். என்றும்,
கடிபொழில் சூழ் கணபுரத்தென் கனியே என்றும்,
மன்ற மரக் கூத்தாடி மகிழ்ந்தாய் என்றும்,
வட திருவேங்கடம் மேய மைந்தா என்றும்,
வென்று அசுரர் குலங்களைந்த வேந்தே என்றும்,
விரிபொழில்சூழ் திருநறையூர் நின்றாய் என்றும்,
துன்று குழல் கருநிறத்து என் துணையே என்றும்
துணைமுலைமேல் துளிசோரச் சோர்க்கின் றாளே. 2067

செங்கால மடநாராய் இன்றே சென்று
திருக்கண்ணபுரம் புக்கென்செங்கண்மாலுக்கு
என்காதலென்துணைவர்க்குரைத்தியாகில்
இதுவொப்பதெமக்கின்பமில்லை*நாளும்
பைங்கானமீதெல்லாமுனதேயாகப் பழனமீன்கவர்ந்துண்ணத்தருவன்*தந்தால்
இங்கே வந்தினிதிருந்துன்பெடையும் நீயும்
இருநிலத்திலினிதென்பமெய்தலாமே. 2078

## சிறிய திருமடல்

ஆரானும் கற்பிப்பார் நாயகரே நானவனை
காரார் திருமேனி காணுமலவும்போய்
சீரார் திருவேங்கடமே திருக்கொவல் ஊரே
மதிட் கச்சி ஊரகமே பேரகமே
பேரா மனுதிருத்தான் வெள்ள றையே வெஃகாவே
பேராலி தண்கால் நரையூர் திருப்புலியூர்
ஆராமம் சூழ்ந்த வரங்கம் கணமங்கை 2673

## பெரிய திருமடல்

கன்னவிலும் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின்,
நன்னறு வசமற் றாரானும் எய்தாமே,
மன்னும் வறு நிலத்து வாளாங் குகுத்ததுபோல்,
என்னுடைய பெண்மையும் என்நலனும் என்முலையும்,
மன்னு மலர்மங்கை மைந்தன், கணபுரத்துப் (2674 - 90)

கண்ணனைக் கண்ணபுரத்தானை, தென்னறையூர்
மன்னும் மணிமாடக் கோயில் மணாளனை,
கன்னவில்தோள் காளையைக் கண்டாங்குக் கைதொழுது

என்னிலைமை யெல்லாம் அறிவித் தால் எம்பெருமான்,
தன்னருளும் ஆகமும் தாரானேல், - தன்னைநான் (2674 - 133)

## நம்மாழ்வார்

மாலை நண்ணித் தொழுதெழுமினோ வினைகெட
காலைமலை கமலமலரிட்டுநீர்
வேலை மோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
ஆலின்மேலாலமர்ந்தான் அடியிணைகளே. 3880

கள்ள விழும் மலரிட்டு நீரிறைஞ்சுமின்
நள்ளி சேரும் வயல்சூழ் கிடங்கின் புடை
வெள்ளியேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுர
முள்ளி நாளுந்தொழுதேழுமினோதொண்டரே. 3881

தொண்டர்நுந்தம் துயர்போகநீரேகமாய்
விண்டு வாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின்
வண்டு பாடும் பொழில் சூழ் திருக்கண்ணபுரத்
தண்டவாணன் அமரர் பெருமானையே . 3882

மானை நோக்கி மடப்பின்னைதன்கேள்வனை
தேனை வாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின்
வானையுந்து மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
தானயந்த பெருமான் சரணாகுமே. 3883

சரணமாகும் தனதாளா அடைந்தார்க்கெல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்
அரணமைந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன் தனதண்டர்க்சன்பாகுமே. 3884

அன்பனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்
செம்போனாகத்து அவணனுடல்கீண்டவன்
நன்போனேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தன்பன் நாளும் தன மெய்யர்க்கு மெய்யனே. 3885

மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம்
பொய்யனாகும் புறமே தொழுவார்க்கெல்லாம்
செய்யில்வாளையுகளும் திருக்கண்ணபுரத்
தையன் ஆகத்தணைப்பார்கட்கணியனே. 3886

அணியனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்
பிணியும் சாரா பிறவிகெடுந்தாளும்

மணி பொனேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
பணிமின் நாளும்பரமேட்டிதன்பாதமே. 3897

பாதநாளும்பணியத் தணியும்பிணி
ஏதாம் எனக்கேலினியென்குறை
வேத நாவர் விரும்பும் திருக்கண்ணபுரத்
தாதியானை அடைந்தார்க்கு அல்லல் இல்லையே 3898

இல்லை அல்லல் எனக்கேலினியென்குறை
அல்லி மாதரமரும் திருமார்பினன்
கல்லிலேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல நாளும்துயர் பாடுசாராவே 3890

பாடுசாராவினை பற்றற வேண்டுவீர்
மாட நீடு குருகூர்ச் சடகோபன் சொல்
பாடலான தமிழ் ஆயிரத்துளிப்பத்தும்
பாடியாடி பணிமினவன் தாள்களே.3891